விலை: 50.00
பக்கங்கள் : 12 + II
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 012 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை (31.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நாகை - காங்கேயன் கப்பல் சேவை ஆரம்பம்

(சென்னை)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல் மீள ஆரம்பமாகவுள்ளது.

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையேயான கப்பல் போக்குவரத்துச் சேவை நாற்பது ஆண்டு கால இடைவெளிக் 11

## சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தின நிகழ்வு

### பொதுமக்களும் பங்கேற்க அனுமதி

(கொழும்பு)

நாட்டின் 77ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளதாக அரச பரிபாலனம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அறிவித்துள்ளது. 11

## இலங்கையை மீட்கும் ஆபத்பாந்தவனாக ரணில்

### வஜிர அபேவர்த்தன புகழாரம்

(கொழும்பு)

இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிலிருந்து மீட்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயத்தமாக இருக்கின்றார் என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள் 11

### 2025ஆம் ஆண்டில்

# அரச அமைப்புகளில் 'புலனாய்வு' கண்காணிப்பு

### ஏனைய இடங்களும் புலனாய்வுக்குட்படும்

(கொழும்பு)

**2025ஆம் ஆண்டில் அரச அமைப்புகள் மற்றும் பொது இடங்களில் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகுமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென விசேட பயிற்சி பெற்ற புலனாய்வாளர்கள் தங்களை இனங்காட்டிக் கொள்ளாமல், அரச அமைப்புகளிலும் பொது இடங்களிலும் இடம்பெறுகின்ற குறைபாடுகளையும் உதாசீனங்களையும் பொதுமக்களை அவகௌரவப் படுத்துகின்ற செயற்பாடுகளையும் 02

## போதைவஸ்து கடத்தலை தடுக்க நடவடிக்கை

### ஜனாதிபதி அநுர பணிப்பு



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு 02

## அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு ஜனவரி 15இல் விசாரணை

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியால் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா கூறிய விடயங்களை மன்றில் நிரூபிப்பதற்குத் தயாராக இருப்பதாக மருத்துவர் அர்ச்சுனா சார்பில் முன்னிலையான சட்டத் 02

## இராணுவ, கடற்படை தளபதிகள் நியமனம்



11

## பொலிஸாருக்கு கட்டாய உடற்பயிற்சி

(கொழும்பு)

இலங்கையில் பொலிஸார் மத்தியில் தொற்றா நோய்கள் அதிகரித்து வருவதால், அவர்கள் ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் கட்டாயமாக உடற்பயிற்சிகளில்ஈடுபட வேண்டும் எனப் பதில் 02

## விகாரைப் பணிகளிலிருந்து இராணுவம் மீளழைப்பு

### இது எவரைத் திருப்திப்படுத்த என பெரமுன கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், விகாரை நிர்மாணிப்பு பராமரிப்பு மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை அழைத்துள்ளது.

இந்நிலையில் இச்செயற்பாட்டுக்கு பொதுஜன பெரமுன தனது கடுமையான எதிர்ப்பை 11

## மக்களின் வயிற்றிலடித்து பிழைப்பு நடத்த எவரையும் அனுமதியோம்

### வர்த்தக அமைச்சர் வசந்த



(கொழும்பு)

மக்களின் வயிற்றில் அடித்து பிழைப்பு நடத்த எவரையும் அனுமதியோம். "இலங்கையில் மீண்டுமொரு வரிசை யுகம் ஏற்பட அநுர அரசு இடமளிக்காது. கோட்டாபய அரசின் வீழ்ச்சிக்கு வரிசை யுகமே பிரதான காரணமாக அமைந்தது என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற 11

# 2025ஆம் ஆண்டிலாவது எமக்கு விழவு வேண்டும்



### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் பல கடந்தும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் இதுவரை எமக்கு நீதி கிடைக்கவில்லை.


எனவே 2025ஆம் ஆண்டிலாவது எமக்கு ஓர் தீர்வு கிட்ட வேண்டும் என்பதனை வலியுறுத்தி, 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியிடம் உள்ள தர்மத்தின் பண்பே அது தரணியில் தலை நிமிரக் காரணம்

## ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா புகழாரம்

*(யாழ்ப்பாணம்)*



சமூக ஊடகங்கள் வலுப் பெற்றிருக்கின்ற இக்கால கட்டத்தில், அச்சு ஊடகமான வலம்புரி தனித்தன்மையுடன் தரணியில் தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால், அதற்கு தர்மத்தின் வழிநின்று செயற்படும் அதன் பண்பே காரணம் என ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தெரிவித்தார்.

வலம்புரிப் பத்திரிகையின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா கடந்த 20ஆம் திகதி நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்காகவும் அவர்களின் வளர்ச்சிக்காகவும் செய்யும் சேவைதான் வலம்புரியை 25 வயதுடைய இளைஞனாகக் கொண்டு வந்திருக்கிறது.

இளைஞனாக இருக்கும் வலம்புரி நூறு வயதைக் கடந்த, ஒரு மனிதனாக மாறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

வலம்புரி, செய்திகளை மட்டும் எமக்குத் தரவில்லை. மருத்துவம், வணிகம், விவசாயம் போன்ற பல துறைகளையும் உள்ளடக்கி வெளிவருகிறது. அதனை ஒரு கருத்துச் சஞ்சிகை என்று கூட சொல்லலாம்.

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு ஒரு தனி மதிப்பு உண்டு. அவை அனைத்தும் புத்தகமாக்கப்பட வேண்டும் என்பது எனது பேரவா.

தர்மம் தலை காக்கும் என்பதற்கிணங்க, உயிர் அச்சுறுத்தல்களையும் தாண்டி தலை நிமிர்ந்து நிற்கும் வலம்புரி நீடூழி காலம் வாழும் என்பதில் ஐயமில்லை என்றார். (ந-7)

# தடைப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிக்கிறது அரசு

## அமைச்சர் நலிந்த தெரிவிப்பு



இடைநிறுத்தப்பட்ட சர்வதேச மற்றும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் புதிய அரசாங்கத்தின் மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஜயதிஸ்ஸ இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், வளமான ஆரம்பம் ஒன்றை அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் நாடு எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீண்டும் நம்பிக்கையைப் பெற்றுள்ளதுடன், இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளனர்.

குறுகிய காலத்தில் பங்குச் சந்தை சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

அரசாங்கம் பதவியேற்று 03 மாதங்களுக்குள் நாட்டை ஸ்திரப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## அரச அமைப்...

கண்காணிப்பர் எனத் தெரியவருகிறது.

அத்துடன் அரச நிறுவனங்களில் கையடக்கத் தொலைபேசிகளில் நெடு நேரம் ஈடுபட்டு, தமது கடமை நேரத்தை வீணடிப்பவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் அறிய வருகிறது.

இதேவேளை பொது இடங்களில் சுற்றுச் சூழலை அசுத்தப்படுத்துதல், தகாத வார்த்தைப் பிரயோகங்கள், ஒழுங்கற்றமுறையில் வாகனங்களைச் செலுத்துதல், கையடக்கத் தொலைபேசியில் உரையாடியவாறு வாகனம் செலுத்துதல் என்பவற்றையும் குறித்த புலனாய்வாளர்கள் அதிதீவிரமாகக் கண்காணிப்பர்.

இதற்கும் மேலாக, போக்குவரத்துப் பொலிஸாரின் சேவை தொடர்பிலும் புலனாய்வாளர்களின் கண்காணிப்புத் தீவிரமாக இருக்கும் என்றும் குறித்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## போதைவஸ்...

பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்துடன் தொடர்புடைய நபர்களின் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்குத் தெரிவித்த ஜனாதிபதி அதற்காக இணையவழி முறையைப் பின்பற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக்காட்டினார்.

நிகழ்நிலை முறையின் ஊடாக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களைக் கண்டறிந்து அது தொடர்பான உட்கட்டமைப்பை மேம்படுத்துமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ந-7)

## அர்ச்சுனாவு...

தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

குறித்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 15இல் விசாரணைக்காகத் திகதியிடப்பட்டது. (ந-7,33)

## பொலிஸாரு...

பொலிஸ் அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாருக்கு மாலையில் குழு விளையாட்டுக்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

பொலிஸார் மத்தியில் ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் ஏற்பட்டுள்ளதை அடுத்தே இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 250 பொலிஸ் அதிகாரிகள் தொற்றா நோய்களால் உயிரிழந்தனர். அதே நேரத்தில் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்குள் இந்த எண்ணிக்கை 200 ஐத் தாண்டியுள்ளது.

இதயம், கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பிரச்சினைகள், புற்றுநோய் மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை காரணமாகவே இந்த இறப்புகள் நிகழ்ந்துள்ளன.

பொலிஸ் அதிகாரிகள் பெரும்பாலும் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுவதால், சரியான நேரத்தில் ஓய்வெடுக்கவோ அல்லது உணவை உட்கொள்ளவோ முடியாமல் அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள்.

எனவே அவர்கள் தமது உடல் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.(ந-7)


28வது பிறந்தநாள் நினைவலைகள்

வெற்றிவேலு பிரசாந்தி

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
க.பொ.த உயர்தரம் (கணிதப்பிரிவு) 2015

தாயின் மடியில் 31.12.1996
நோயின் பிடியில் 31.08.2016



இருபத்தெட்டு அகவையும் ஆனதம்மா
இளையவளே உனைத் தேடுகின்றோம்
எங்கே நீயும் சென்றாயம்மா......?

வேதனைச் சுவடு வழி விழி நீர் சொரிய
சோதனை கொண்டுமே துடிதுடிக்கிறோம்
ஆறாத வடுவாய் உன் நினைவுகள்
ஆற்ற வழி தெரியாமல் வாட்டுதம்மா!

பிரசாந்திக் குட்டியே.....!
காலம் முழுவதும் உன்னை
கண் கலங்கி நாமழைக்கிறோம்
கனவு கொண்டு நீ வருவாயா.... அம்மா!

கடைக்குட்டியே காத்திருந்து வேண்டுகிறோம்
காட்சிதர வந்திடாயோ....!!!

விண்ணுலகில் வாழும் எங்கள் கடைக்குட்டிச் செல்லத்திற்கு
கண்ணீரில் நனைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்

"பிரசாந்தி வாசா"
எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.
(C-1914)

பிரிவால் துயருறும்



நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி-சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ்
075 353 1367, 077 844 9861
(2877)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுகள் பல கடந்தும்

# இன்றுவரை தீர்வு கிடைக்கவில்லை

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை

(முறிகண்டி)

**தாய்மாரின் கண்ணீருக்குப் பதில் தருவதாகக் கூறிய புதிய ஜனாதிபதியும் ஏமாற்றியுள்ளார் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அலுவலகம் முன்பாக நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட உறவுகள் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சரணடைந்தவர்களும் கைது செய்யப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைத் தேடி நாங்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டுபிடிக்க சர்வதேசம் முன்வர வேண்டும் என வலியுறுத்தி வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் போராடுகின்றோம்.

இதற்கு முன் இருந்த அரசுகள் எம்மை ஏமாற்றின. அதனால் சர்வதேசத்திடம் நீதி கேட்டு போராடுகிறோம்.

ஆண்டுகள் பல கடந்தாலும் எமது போராட்டத்துக்கான தீர்வும் நீதியும் இன்றுவரை எமக்குக் கிடைக்கவில்லை. எமக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு நீதி பெற்றுக் கொடுப்பேன் என புதிய ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் 6 மாதங்களாகியும் இன்றுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

ஏனைய ஜனாதிபதிகள் போன்று இவரும் ஏமாற்றுவதாகவே உணர்கின்றோம். இன்றுவரை பாதிக்கப்பட்ட எம்முடன் பேசக்கூடவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலியும், கண்ணீரும் எனக்கும் தெரியும் என்றார். அதன் வலி எனக்கு புரியும் என்றார். ஆனால் இன்றுவரை எந்த முயற்சியும் அவர் எடுத்திருக்கவில்லை.

நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றோம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். அதேவேளை யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலும் குறித்த போராட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33-100-250-316)

## ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸின் கையொப்பத்தின் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இருந்து இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனவரி, பெப்ரவரி, மார்ச், செப்ரெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில், 10ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

மேலும், ஏப்ரல், மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ஓய்வூதியம் 9 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.


இதேவேளை, ஓகஸ்ட் மாதம் மாத்திரம் 7ஆம் திகதி ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)













**யாழ்.கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆக சிவமடத்தின் ஏற்பாட்டில் மார்கழிப் பெருவிழாவின் சேக்கிழார் அரங்க நிகழ்வுகள் யாழ்.கலாசார மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது.**

**இதன் போது நாட்டிய அஞ்சலி, பட்டிமன்றம் போன்ற அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் மெய்கண்டார் விருதும் வழங்கி வைக்கப்பட்டது.**

**அத்துடன் திருவாசகம், கட்டுரைப் போட்டிக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியாவை வீழ்த்திய அவுஸ்திரேலியா



மெல்போர்னில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 184 ஓட்டங்களினால் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் 4 ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 26 ஆம் திகதி தொடங்கியது.

பாக்சிங் டே என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த டெஸ்ட்டில் முதலில் துடுப்பாட்டம் செய்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 474 ஓட்டங்களை குவித்தது.

இதையடுத்து களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 369 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

105 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலியா 234 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் பாக்சிங் டே டெஸ்ட்டில் வெற்றிபெற இந்தியாவுக்கு 340 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

போட்டியின் இறுதி நாளான நேற்று 340 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

எனினும் அவுஸ்திரேலிய அணியின் அதிரடி பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இந்திய முன்னணி வீரர்களான ரோகித் சர்மா 9 ஓட்டத்துடனும் கே.எல்.ராகுல் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் கோலி 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

சிறிது நேரம் தாக்குப்பிடித்து ஆடிய ரிஷப் பண்ட் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து களம் இறங்கிய ஜடேஜா 2 ஓட்டத்துடனும் நிதிஷ் குமார் ஒரு ஓட்டத்துடனும் ஆகாஷ் தீப் 7 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

மறுபுறம் நிதானமாக ஆடி வந்த ஜெய்ஸ்வால் 84 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்தியா 79.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 155 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதன் மூலம் அவுஸ்திரேலியா 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி சிட்னியில் தொடங்குகிறது. (6-8)

அதேபோல டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் நுழையும் வாய்ப்பையும் இழக்கும் சூழலில் இந்திய அணி உள்ளது. இந்த தொடரில் வென்றால் மட்டுமே இறுதி போட்டிக்குத் தடையின்றி செல்லும் நிலை இருந்தது. தற்போதைய சூழலில், 3 ஆவது இடத்தில் உள்ள இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் ரிசல்ட்டை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டிய சூழல் உருவாகி உள்ளது. அந்த டெஸ்ட் தொடரை இலங்கை 2-0 என்று வென்றுவிட்டால், இலங்கை அணி 2 ஆம் இடத்திற்கு முன்னேறி தென் ஆபிரிக்கா உடன் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை எதிர்கொள்ளும் நிலை உள்ளது.

# செஞ்சுரியன் டெஸ்டில் தென் ஆபிரிக்கா வெற்றி




செஞ்சுரியனில் நடந்த முதல் டெஸ்டில் 2 விக்கெட் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்கா அணி "திரில்" வெற்றி பெற்றது.

தென் ஆபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் செஞ்சுரியனில் நடந்தது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 211, தென் ஆபிரிக்கா 301 ரன் எடுத்தன. பாகிஸ்தான் அணி 2 ஆவது இன்னிங்சில் 237 ரன் எடுத்தது. பின், 148 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென் ஆபிரிக்கா, 3 ஆம் நாள் முடிவில் 2 ஆவது இன்னிங்சில் 27/3 ரன் எடுத்திருந்தது. மார்க்ரம் (22) அவுட்டாகாமல் இருந்தார்.


நான்காம் நாள் ஆட்டத்தில் 7 விக்கெட் கைவசம் வைத்திருந்த தென் ஆபிரிக்காவுக்கு இன்னும் 121 ரன் தேவைப்பட்டது. மார்க்ரம், கப்டன் பவுமா ஜோடி ஆறுதல் தந்தது. நான்காவது விக்கெட்டுக்கு 43 ரன் சேர்த்த போது முகமது அபாஸ் "வேகத்தில்" மார்க்ரம் (37) போல்டானார். தொடர்ந்து அசத்திய அபாஸ் பந்தில் பவுமா (40) "பெவிலியன்" திரும்பினார்.

பின் இணைந்த மார்னோ யான்சென், ரபாடா ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. அமீர் ஜமால் வீசிய 39 ஆவது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி அடித்த ரபாடா, முகமது அபாஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டி வெற்றியை உறுதி செய்தார்.

தென் ஆபிரிக்க அணி 2 ஆவது இன்னிங்சில் 8 விக்கெட்டுக்கு 150 ரன் எடுத்து "திரில்" வெற்றி பெற்றது. யான்சென் (16), ரபாடா (31) அவுட்டாகாமல் இருந்தனர். பாகிஸ்தான் சார்பில் முகமது அபாஸ் 6 விக்கெட் சாய்த்தார். இந்த வெற்றியின்மூலம் தென் ஆபிரிக்க அணி முதன்முறையாக உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு நுழைந்தது (6-8)

# எங்கள் போராட்டம் பலனளிக்கவில்லை

## தோல்வி குறித்து ரோகித்




நாங்கள் போட்டியை விட்டு கொடுப்பதற்காக உள்ளே செல்லவில்லை என இந்திய அணியின் கப்டன் ரோகித் சர்மா தோல்வி குறித்து கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,


இந்த தோல்வி மிகுந்த ஏமாற்றமாக உள்ளது. நாங்கள் போட்டியை விட்டுக் கொடுப்பதற்காக உள்ளே செல்லவில்லை. நாங்கள் போராடுவதற்காக சென்றோம். துரதிஷ்டவசமாக எங்களால் அதைச் செய்ய முடியவில்லை. இந்த டெஸ்ட் போட்டியை எடுத்துக் கொண்டால், எங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. 91 ரன்னுக்கு ஆறு விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தோம். ஆனால் அவுஸ்திரேலியா கடுமையாக போராடியது.

இதன் காரணமாக எங்களுக்கு 340 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக இவ்வளவு பெரிய இலக்கை இங்கு துரத்த முடியாது என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே எங்கள் வழியில் நாங்கள் இந்த போட்டியை டிரா செய்வதற்கு விளையாடினோம். இறுதியில் எங்கள் போராட்டம் சரியாக அமையவில்லை.

பும்ரா ஒரு சிறந்த வீரர். தொடர்ந்து பல ஆண்டுகளாக அவர் என்ன செய்கிறார் என்பதை நாங்கள் பார்த்துதான் வருகிறோம். அவர் புள்ளி விபரங்களால் பார்க்கக்கூடியவர் இல்லை. அவர் நாட்டிற்காக போட்டிகளை வெல்வதற்காக வந்து எதையும் செய்ய தயாராக இருக்கிறார். துரதிஷ்டவசமாக பந்துவீச்சில் அவருக்கு இன்னொரு முனையில் நல்ல ஆதரவு கிடைக்கவில்லை என்று கூறி இருக்கிறார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணித்தியாலங்களுக்குள் 7,676 சாரதிகள் கைது




(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 29 ஆம் திகதி காலை 6 மணி முதல் 30 ஆம் திகதி காலை 6 மணி வரை போக்கு வரத்து விதிமுறைகளை மீறிய 7,676 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய, நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இந்த சாரதிகள் கைது செய்யப்பட்டுள் ளனர். அதன்படி, மது போதையில் வாக னங்களை செலுத்திய 413 சாரதிகளும் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்திய 49 சாரதிகளும் அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்திய 110 சாரதிகளும் சாரதி அனுமதிப்பத் திரங்கள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் 694 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் 5,324 சாரதிகளும் கைது செய்யப் பட்டுள்ளனர். (நி-8)

### அரச ஊழியர்களுக்கான

# பண்டிகை முற்பணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வழங் கப்படும் 10,000 ரூபா பண்டிகை முற்பணத்தை இவ்வருடம் குறைந் தது 40,000 ரூபாவாக அதிக ரிக்குமாறு இலங்கை அரச உத்தி யோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் சுமித் கொடிகார அரசாங்கத்திடம் கோரி க்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரசிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுப்பதாக கூறிய அவர், 10,000 ரூபா தொகையை வைத்து இக்காலத்தில் எதுவும் செய்ய முடியாது என்றும் இம்முறை பண்டிகை முற்பணமாக குறைந்த பட்சம் 40,000 ரூபாவை அரசு அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (நி-8)

ஓம் சிவாய நம

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

கடந்த (11.12.2024) புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது தாயார்

**அமரர். மகாலட்சுமி கணபதிப்பிள்ளை**



தோற்றம்-24.04.1940 மறைவு-11.12.2024

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 31.12.2024 இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வண்ணை காமாட்சி அம்பாள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.** (682)

**13, அரசடி ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

குடும்பத்தினர்.

# நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவை சீரமைக்க தீர்மானம்

(கொழும்பு)

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவை மறுசீரமைத்து, முழுமையான புலனாய்வுப் பிரிவாக மீண்டும் நிறுவுவதற்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் ஒரு பணிப்பாளரின் கீழ் தனி புலனாய்வு பிரிவாக இந்தப் பிரிவு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, நிதிக் குற்றப்பிரிவு என்பது குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் இயங்குகின்ற ஒரு நிறுவனமாகும்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் குவிந்து கிடக்கும் முறைப்பாடுகளை விசாரிப்பது கடினமான பணியாக இருப்பதால், நிதிக் குற்றப் பிரிவு மற்றுமொரு பிரிவாக மீண்டும் ஸ்தாபிக்கப் படுகின்றது.

கடந்த அரசாங்கத்தின் போது நாட்டில் இடம்பெற்ற பாரிய நிதி முறைகேடுகள், மோசடிகள் மற்றும் ஊழல் வழக்கு கள் தொடர்பான விசாரணைகள் புதிதாக நிறுவப்பட்டுள்ள நிதிக் குற்றப் பிரிவினூடாக விசாரிக்கப்பட்டு வருகின் றன. (நி-8)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றுக்கான 2025.01.01- 2025.12.31 வரையிலான காலப்பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி, மீள் கேள்வி அறிவித்தல்-2025

2024.12.17 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி, மீள் கேள்வி அறிவித்தலில் அந்திரான் சந்தை, மண்டான் சந்தை ஆகிய இரு சந்தைகளுக்கு எவரும் விண்ணப்பிக்காத காரணத்தால் விண்ணப்பக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இச் சந்தைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 2024.12.31, 2025.01.01 ஆம் திகதி பிற்பகல் 4.15 மணிவரையும் , 2025.01.02 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் 2024.01.02 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணி வரை ஏற்கப்பட்டு உடன் கேள்வி திறக்கப்படும்.

தொடர்புக்கான தொலைபேசி இல:

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | : 021 226 3271 | கடமை நேரம் |
| நெல்லியடி உப அலுவலகம் | : 021 226 1234 | மு.ப. 8.30 - பி.ப. 16.15 வரை |
| உடுப்பிட்டி உப அலுவலகம் | : 021 226 1336 | |
| கட்டைவேலி உப அலுவலகம் | : 021 226 1244 | |

(சி-1915)

**கணேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.** **31.12.2024**

# இராசிபலன்

**31.12.2024**
**மார்கழி 16, செவ்வாய்க்கிழமை**
**பிரதமை பின்னிரவு 4.42 மணிவரை**

**பூராடம் பிற்பகல் 1.31 மணிவரை**
**சுபநேரம் -10.59-12.29 மணிவரை**
**இராகுகாலம் 3.29-4.59 மணிவரை**

**சந்திராஷ்டமம் - கார்த்திகை, ரோகிணி**

**வளவன்**

**மேஷம்:** மறைமுகப் போட்டி களைச் சமாளிப்பீர் கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**ரிஷபம்:** மனதில் இனம்புரி யாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மிதுனம்:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உற வினர்களின் சந்திப் பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள்.

**கடகம்:** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கை களை நிறைவேற்று வீர்கள், உள்ளம் மகி ழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், சிந்தனை ஆற்ற லால் சிறப்படையும் நாள்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக் கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய் வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், ஆதாயம் தரும் வேலையொன் றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், நண்பர்கள் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், தன வரவு திருப்திகரமாக அமையும், செயற்பாடுகளில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களின் விமர் சனங்களை மறந்து செயற்படுவது நல் லது, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆகா ரத்தில் கட்டுப்பாடு தேவை, போசன சுகமுண்டு.

**மகரம்:** பயணங்களால் பிரபல மானவர்களின் சந் திப்பு இடம்பெற லாம், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவாகும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** பொது வாழ்வில் பாரா ட்டும் புகழும் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொரு ளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூல முண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்க ளின் தகுதியை உயர் த்தும், குடும்ப மகிழ் ச்சி கூடும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உற்சாகமான நாள்.

**மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதிப்பத்திரமின்றி பனை மரங்கள் தறிப்பு

## மீறியோர் மீது வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழில் அனுமதிப்பத்திர மின்றி சட்டவிரோதமாக பனை மரங்களை வெட் டியவர்கள் மீது நேற்று முன்தினம் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருபாலை மற்றும் நீர் வேலிப்பகுதியில் அனுமதிப்பத்தி ரமின்றி சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவனின் நேரடியான அதிரடிக் கண் காணிப்பு நடவடிக்கையில் பனை மரங்களை வெட்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கையின் பிரகாரம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை தனங்கிளப்புப் பகுதியில் சட்ட விரோதமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீதும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# 179 பேரின் உயிரைப் பறித்த விமான விபத்து

## விரிவான விசாரணைக்கு தென்கொரியா உத்தரவு

(சியோல்)

179 பேரின் உயிர்களைப் பறித்த கொடிய விமான விபத்துக்கான காரணம் என்ன என்பதைத் தீர்மானிக்க தென்கொரிய அதிகாரிகள் போராடி வருகின்றனர்.

இதனிடையே தென்கொரியாவின் செயல் தலைவர் சோய் சாங்-மோக் நாட்டின் முழு விமான இயக்க முறைமையிலும் அவசர பாதுகாப்பு ஆய்வினை மேற்கொள்ள உத்தரவிட்டார். அதேநேரம், நாட்டில் ஏற்பட்ட மிகப் பெரிய விமான விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும் மோசமான பேரழிவுக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறியவும் தென்கொரிய புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றனர்.

தாய்லாந்திலிருந்து தென்கொரியாவுக்கு 181 பயணிகளை சுமந்து வந்த ஜெஜு ஏரின் 7C2216 விமானம் நேற்று முன்தினம் முவான் சர்வதேச விமான நிலை யத்தில் ஓடுபாதையில் அடிப்பகுதி உரசியபடி சென்ற நிலையில், திடீரென ஓடுபாதையில் இருந்து விலகி பலத்த வேகத்தில் சுற்றுச் சுவரில் மோதியது.

இதனால் விமானம் முழுமையாக தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் அனைத்து பயணிகளும் ஆறு பணியாளர்களில் நான்கு பேரும் உயிரிழந்தனர்.

இடிபாடுகளில் இருந்து இரண்டு பணியாளர்கள் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (நி-8)

# இரத்ததான நிகழ்வும் மருத்துவ முகாமும்

(கிளிநொச்சி)

"உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் மாபெரும் இரத்த தான நிகழ்வும் மருத்துவ முகாமும் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த இரத்த தான முகாமில் குருதிக்கொடைத் தன்னார்வலர்களைக் கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# இராணுவத் தளபதியாக லசந்த ரொட்ரிகு

(கொழும்பு)

25 ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசன்ன ரொட்ரிகு நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் பதவியில் தற்போது கடமையாற்றும் லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனின் சேவை நீடிப்பு நிறைவடையும் நிலையில் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகு, இலங்கை இராணுவத்தின் பிரதிப் பிரதானியாகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும், புதிய கடற் படைத் தளபதியாக ரியர் அட் மிரல் காஞ்சன பனாகொட நேற்று நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது 2025 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கைநெறிகள் நாளை 01.01.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பட வடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக் கலை வல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவு சேவை உணவு வழங்குநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துனர் போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும்.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை இன்று மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12. கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினைப் பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்.தொழிற்பயிற்சி அதிகார சபை பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (6-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3285

### கலா




### மாலன்




### சாம்சன்




### கலையரசன்




### அஞ்சலா




### ரோகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்ட

# கரோல் கீத போட்டியில் பளை மத்.மூன்றாமிடம்



(கிளிநொச்சி)

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட நத்தார் கரோல் பாடல் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த கரோல் குழுவினர் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தைப் பெற்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

குறித்த போட்டி கடந்த 24 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்றது.

இதன் போது வெற்றிபெற்ற குறித்த பாடல் குழுவினருக்கு வெற்றிக் கிண்ணம், சான்றிதழ்கள், 30,000 ரூபா பெறுமதியான காசோலை என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வெற்றி பெற்றவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது கரோல் குழுவினரால் கரோல் கீதமும் இசைத்துக் காண்பிக்கப்பட்டது.

கிறிஸ்தவ கலாசார உத்தியோகத்தர் லூயிஸ் மேரி ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) இ.நளாஜினி, பிரதம கணக்காளர் சி.கஜேந்திரன் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பளை மத்திய கல்லூரியின் சங்கீத பாட ஆசிரியர் லூர்தகவி நேசநாயகம், மாவட்ட செயலக கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் கரோல் குழுவினர் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்



(மன்னார்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மன்னாரில் கையெழுத்துப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தின் முன்பாக கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அருட்தந்தையர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (6-8-285)

# பூவரசன் குளம் பகுதியில் துப்பாக்கி, கோடா மீட்பு


## ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் 18,000 மில்லி லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரண்டாம் செங்கல்படை பகுதியில் விசேட சுற்றிவளைப்பு ஒன்றை பூவரசன்குளம் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் பெரல் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்திக்கான 18,000 மில்லிலீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டதுடன், அதனை




உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (6-8-250)

# ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 9 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 2 மணிக்கு சங்க மண்டபத்தில் ஏழாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி காஞ்சன மாலா உதயகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் ஓய்வு நிலை அதிபர் திருமதி குககுமாரி விஜயரகுநாதன், சிறப்பு விருந்தினர்களாக காங்கேசன்துறை கலைமகள் ம. வித்தியாலயத்தின் அதிபர் திருமதி. தமிழ்ச்செல்வி சண்முகானந்தம், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ உதவியாளர் திருமதி. ஆர். ஸ்ரீரங்கநாயகி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

# கல்வியில் மீள் எழுச்சி தேவை ரவிகரன் எம்.பி தெரிவிப்பு

(நெளுக்குளம்)

வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் கடந்தகாலங்களில் எழுச்சி பெற்றிருந்த மாணவர்களின் கல்வி, தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் கல்வியில் மீள் எழுச்சி தேவையென வன்னிபாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - பத்தாம்குறிச்சி, அறிவொளி மையம் கல்விநிலையத்தில், கல்வியிலும் மாணவர்கள் தமது கல்விச் சுற்றுலாவின் போது முல்லைத்தீவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது குறித்த மாணவர்கள் நேற்று முன்தினம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் இல்லத்திற்கு சென்றதுடன் கலந்துரையாடலொன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாணவர்களின் கல்வித்தரம் முன்னிலையில் இருந்தது. ஆனால் தற்போது வடக்கு, கிழக்கில் எமது மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்து செல்கின்ற நிலைகளைக் காண்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும்.

மாணவர்கள் சிறந்த முறையில் கல்விகற்பதற்காக உதவிகளை வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், புலம்பெயர் உறவுகள் என அனைவரும் தயாராக இருக்கின்றோம்.

இவ் வாறிருக்கும் போது வடக்கு, கிழக்கு மாணவர்கள் தேசியரீதியில் முதல்நிலை பெற்றார்கள் என்ற நிலையை ஏன் ஏற்படுத்தமுடியாது. அது மாணவர்களான உங்களின் கைகளிலேயே இருக்கின்றது மேலும் வடக்கு, கிழக்குத் தமிழ் பிள்ளைகள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள் என்ற நிலையைக் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு எமது மாணவர்கள் ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்துவிளங்கும் போது எமது அடுத்தடுத்த சந்ததியினர் சிறந்து விளங்குவார்கள் என தெரிவித்தார். (6-8-299)

# சொகுசு வாகனத்தில் கஞ்சா கடத்திய ஒருவர் கைது

(நெளுக்குளம்)

யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்குடியிருப்பிற்கு சொகுசு வாகனத்தில் கேரளக் கஞ்சா கடத்திய சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தேராவில் தேக்கங்காடு பகுதியில் புதுக்குடியிருப்பு போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் குறித்த சொகுசு வாகனத்தை மறித்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது குறித்த வாகனத்தில் 6 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியை சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சொகுசு வாகனத்தையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் கஞ்சாவையும் சொகுசு வாகனத்தையும் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-8)


**முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பிரதேச பொலிஸ் நிலையமானது 5 எஸ் (five S) திட்டத்தின் கீழ் செயற்படும் முன் மாதிரி பொலிஸ் நிலையமாக கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

(படம்-சதீஷ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்களுக்கான இழப்பீடு வழங்கல் 5 ஆம் திகதிக்கு முன் நிறைவடையும்



(கொழும்பு)

இந்த வருடத்தில் சிறு போக பருவத்தில் வெள்ளம், வறட்சி மற்றும் காட்டு யானைகளால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி முடிக்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை அறிவித்துள்ளது.

தற்போது, சுமார் 80 சதவீதமான விவசாயிகளுக்கு 80 மில்லியன் ரூபாய் வரையில் இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய விவசாயிகளுக்கு எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதிக்குள் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த இழப்பீட்டுத் தொகையை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சுமார் 80 ஆயிரம் ஏக்கர் பயிர் நிலங்கள் சேதமடைந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளதென விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது. (நி-8)

# இறக்குமதி அரிசிக்கு 45 வீத வரி விதிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 45 வீத வரி விதிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசியின் விலை 150 ரூபாவிற்கு குறைவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபாய் வரி விதிக்கப்பட்டு, அதிகபட்ச சில்லறை விலையாக கிலோ ஒன்று 230 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு இரண்டு முதல் பத்து ரூபாவாக காணப்பட்டதாகவும் மக்களுக்கு சலுகை விலையில் அரிசி விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக அரிசி கிலோ ஒன்றுக்கு 65 ரூபாய் அல்லது 45 வீத வரி அறவீடு செய்யப்படுவது தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழாகும் என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (நி-8)

# கைவிடப்பட்டுள்ள அரிசி ஆலைகளை மீண்டும் இயங்க வைக்குமாறு பணிப்பு

(கொழும்பு)

பல வருடங்களாக கைவிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் அரிசி ஆலைகளின் களஞ்சியசாலைகளை மீண்டும் பயன்பாட்டிற்காக தயார்ப்படுத்துமாறு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஹிங்குரக்கொட சதொச அரிசி ஆலையின் களஞ்சியசாலை மற்றும் கல்கமுவ அரசாங்க நெற் களஞ்சியசாலை ஆகியவற்றுக்கான கள விஜயத்தின் பின்னர் அமைச்சர் இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

நாட்டில் மீண்டுமொரு அரிசித் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காகக் குறித்த அரிசி ஆலைகளைத் தயார்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார். (நி-8)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1995 - இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா-42
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSc, IT&Network Officer
எதிர்பார்ப்பு : IT Field
தொ.இ: B/15042

பிறப்பு: 1995 - இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கிபா-30
உயரம்: 6'3"
தகைமை/தொழில்: BCom,Junior Excutive Assistant(bank).
எதிர்பார்ப்பு - தகுதியான பெண், சைவ போசனம்
தொ.இ: B/15044

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம் : திருவோணம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BBA,MA
எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15046

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1996 - இந்து
நட்சத்திரம்: கேட்டை
1 இல் சூரி செவ்
கி.பா: 47
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L,Crafman
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உத்தியோகம்
தொ.இ: G/15064

பிறப்பு -1997 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 24
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - BBA, Accountant(pvt)
எதிர்பார்ப்பு -: Accountant, Engineer ntspehL(London)
தொ.இ: G/15067

பிறப்பு - 1998 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா- 101
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: HNDA,Account Executive(pvt)
எதிர்பார்ப்பு - படித்த ஆண்
தொ.இ: G/15068

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 450-600 | 400 |
| உருளைக்கிழங்கு | 250 | 230 | 230 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1200 | 1200-1400 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350-400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 250 | 150-180 | 200 |
| கோவா | 300 | 200 | 250 | 270 | 300 |
| கரட் | 250 | 250 | 400 | 250 | 400 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 | 250 |
| புடோல் | 180 | 250 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 380 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 220 | 380 | 200 |
| பாகற்காய் | 800 | 700 | 1000 | 1000 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 280 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 200 | 300-450 | 350 |
| லீக்ஸ் | 400 | 380 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 450 | 450 | 400 | 300 | 500 |
| கறிமிளகாய் | 850 | 700 | 700 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400-500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 350 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 150-200 | 120 |
| தேசிக்காய் | 300 | 350 | 200 | 350-500 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-180 | 200 |
| இராசவள்ளி | -- | 600 | 800 | 800 | 600 |
| வெங்காயப்பூ | 500 | 700 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 120 | 200 | 150-200 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 90 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அன்புள்ளம் கொண்ட, இனிய மற்றும் ஒத்துழைப்பு கொடுப்பவர்களின் துணை விலை மதிப்பற்றது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அநுர அரசின் அறிவிப்பு நடைமுறைக்கு வந்தால்...

நாடு பொருளாதார மந்தத்தால் பெரும் அவல நிலையைச் சந்தித்துள்ளதென்ற கவலை அனைவரிடமும் உண்டு.

அதேநேரம் பொருளாதார மந்தம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? என்பதைக் கூறுவதற்குப் பெரும்பான்மை இனத்தவர்களில் எவரும் தயாரில்லை.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற குறுகிய சிந்தனைக்குள் சிங்கள சமூகம் ஆட்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக நீண்டகாலமாகப் போர் நடத்தியது.

அந்தப் போரின் விளைவுதான் இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழக் காரணமாயிற்று.

இந்த உண்மையை சிங்கள மக்கள் அனைவரும் அறிந்துள்ளனராயினும் அதை வெளிப்படையாகக் கூறுவதற்கு அவர்கள் தயாரில்லை.

உண்மையில் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாயின், அந்தப் பிரச்சினைக்கு மூல காரணமாக இருக்கக்கூடிய ஏதுக்களை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும். அப்போதுதான் நிலைமையைச் சுமுகப்படுத்த முடியும்.

அந்தவகையில், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாக இருந்தால், முதலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம்.

தவிர, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

இஃது ஒருபுறமிருக்க, பல்லின மக்கள் வாழுகின்ற இலங்கைத் திருநாடு தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற குறுகிய நினைப்பு எப்போது சிங்களப் பேரினவாதத்திடம் ஏற்பட்டதோ அன்று தொட்டதுதான் இலங்கைக்கான சாபம்.

ஆக, சாப விமோசனம் பெற வேண்டுமாயின், இலங்கை எமது நாடு என்ற உயரிய தேசப்பற்றை இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளிடமும் ஏற்படுத்த வேண்டும்.

அதேநேரம் பௌத்த மதத்தை மட்டும் முதன்மைப்படுத்தி ஏனைய சமயங்களைத் தாழ்த்த முற்படும்போது அங்கு மதவாதம் கருக்கட்டுகிறது.

ஆக, இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தம் என்ற நினைப்பு அறவே அழிக்கப்படுவதுடன் இலங்கை பௌத்த நாடு என்ற மதவாதமும் இல்லாது செய்யப்பட வேண்டும்.

அப்போதுதான் நாட்டில் அபிவிருத்தியும் பொருளாதார எழுச்சியும் தேசப்பற்றும் உயர்வடையும்.

அந்தவகையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம்; பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பதில் தளர்ந்த போக்கைக் கடைப்பிடிப்பதை உணர முடிகிறது.

ஆம், சட்டவிரோதமாக மதத் தலங்களை அமைப்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என பௌத்த சாசன அமைச்சர் ஹனிதும சுனில் செனெவி தெரிவித்துள்ளார்.

இதை நாம் கூறும்போது, அது பௌத்தத்தை மட்டும் சுட்டுகிறதா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், பௌத்தம் என அமைச்சர் குறித்துரைக்காவிட்டாலும் கடந்த கால ஆட்சியாளர்கள் போல சட்டவிரோதமாக மதத் தலங்கள் அமைப்பதற்கு நாம் இடம்கொடுக்க மாட்டோம் என அமைச்சர் குறிப்பிட்டதிலிருந்து அவர் எதை முன்மொழிகிறார் என்பதை ஊகிக்க முடியும்.

ஆக, நாட்டில் ஜனாதிபதி அநுர, பௌத்தம் என்ற மதவாதத்தை ஒழித்தால் – பௌத்த பீடங்கள் ஏற்றுகின்ற இனவாதத் தீயை அணைத்தால் நாடு சுபீட்சம் பெறும் என்பது சர்வநிச்சயம்.

## அரிசித் தட்டுப்பாட்டை நீக்க திராணி இல்லாத அநுர அரசு

### சாடுகிறார் தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர்

அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியைக் கூட இறக்குமதி செய்ய முடியாத அரசாங்கம் அரிசி மாபியாக்களை எவ்வாறு இல்லாதொழிக்கும்.

வாய்ச்சொல் வீரரான அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமறைவாகியுள்ளார் எனத் தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டது.

ஆனால் இதுவரையில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கூட இறக்குமதி செய்யப்படவில்லை.

தேசிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## விவசாயிகளுக்கு இழப்பீடாக ரூ.ஒரு இலட்சம் வழங்க வேண்டும்

### முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

விவசாயிகளுக்கு இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்காக வழங்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகையை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு எமது அரசாங்கத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதனை நடைமுறைப்படுத்த தற்போதைய அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர், விவசாயிகள் இந்த அரசாங்கத்தினால் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு நான் விவசாய அமைச்சராகப் பதவியேற்ற போது வழங்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா கொடுப்பனவே தற்போதும் வழங்கப்படுகிறது.

இது தற்போதைய அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என செய்தியும் வெளியிடப்பட்டது.

இந்த அரசாங்கத்துக்கு உரமானியத்தைக் கூட வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது அரசாங்கத்தில் உரமானியம் 15 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டது எனச் சுட்டிக்காட்டினார். (ந-7)

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

கரணவாய்ப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் உச்சிக்காடு, கரணவாய் தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் குணசேகரம் (வயது 65) என்பரார்வார்.

இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர் தனிமையில் வசித்து வந்துள்ளார். இந்நிலையிலேயே நேற்றுத் திங்கட்கிழமை உயிரிழந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ந-7,60)

## விபரீத முடிவெடுத்து ஒருவர் உயிரிழப்பு

நச்சுத் திரவத்தினை உட்கொண்ட நகைத்தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் நகை வேலை செய்துவரும் அவர் நேற்று திங்கட்கிழமை காலை பணிக்குச் சென்றதாகவும் பின்னர் அங்கு மகன் சென்று பார்த்த போது அவர் மயக்க நிலையில் இருந்ததையடுத்து உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்திய சாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ந-7,60)

## 2025 முதல் ஜனாதிபதி நிதியம் புதிய கட்டிடத்தில்

(கொழும்பு)

இதுவரை கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, லேக்ஹவுஸ் கட்டிடத்தின் 3வது மாடியில் இயங்கி வந்த ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம் 2025 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் புதிய இடத்தில் நிறுவப்பட உள்ளது.

இதன்படி ஜனாதிபதி நிதியத்தின் புதிய அலுவலக வளாகம் கொழும்பு 01, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்தில் நிறுவப்படுகிறது.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் பொதுமக்கள் 2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல், கொழும்பு 01, ஜனாதிபதி மாவத்தை, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலக வளாகத்திற்குச் சென்று சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## ஊடகங்களுக்குத் தடை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை

### ஊடக அமைச்சர் வெளிப்படை

(கொழும்பு-)

ஊடகங்களுக்குத் தடைகளை விதிக்கும் எண்ணம் புதிய அரசாங்கத்திற்கு இல்லை என்றும் மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுவதாகவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுடன் ஊடக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு ஊடகங்களைப் பாதிக்கும் வகையில் தற்போது வரைவு செய்யப்பட்ட சட்டம் மற்றும் தற்போதுள்ள சட்டங்களில் உள்ள சில குறைபாடுகள் குறித்து அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டதுடன், சங்கத்தின் பிரதிநிதிகளைப் பாதிக்கும் பொதுவான சில விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இலங்கை ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சரிடம் முன்வைத்துப் பல கோரிக்கைகளைக் கலந்துரையாடும் நோக்கில் ஒலிபரப்பாளர்களின் ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ரூ.10 இலட்சம் பெறுமதியான போதைப்பொருட்களுடன் இளைஞன் கைது

(பாணந்துறை)

பாணந்துறை, மாலமுல்ல, கொங்கஹகொட்டுவப் பிரதேசத்தில் போதை மாத்திரைகள் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

ஹிரண பொலிஸாருக்குக் கிடைத்தத் தகவலின் பேரில் கொங்கஹகொட்டுவப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

இதன்போது குறித்த வீட்டினுள் அட்டைப்பெட்டியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 11 ஆயிரத்து 80 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 5 ஆயிரம் போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் மொத்தப் பெறுமதி 10 இலட்சம் ரூபா ஆகும். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

# உயர்நீதிமன்றம் வழங்கிய சரித்திர தீர்ப்பு!

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தில்

பதிலளித்த வழக்கறிஞருக்கு எதிராக சட்டவிதி இருக்கும்போது அவசரமான சந்தர்ப்ப சூழ்நிலையில் வழக்கில் பதிலளித்த வழக்கறிஞர் எந்தக் குறிப்புக்களையும் ஏற்படுத்த முடியாது. அத்தகைய குற்றம் சாதாரணமாகக்கூடி ஏற்படுத்த முடியாது, இதன் கண்டுபிடிப்புகளை வெளிப்படையாக பதிவு செய்வது அவசியம் என்று நான் காண்கிறேன். கடந்த கால, நிகழ்கால அல்லது எதிர்கால வழக்குகளுக்கு பாரபட்சம் காட்ட நீதிமன்றத்தை குறித்துக்காட்ட விளங்கப்படுத்த கூடாது.

மேலும் உடனடிச் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமாக, நீதியரசருடைய அவதானிப்புகள் இதை மேலும் தெளிவுபடுத்துகின்றன: முறைகேடுகள் குற்றவியல் சாயல் கொண்டதாகக் கூறப்படும் ஒழுங்கு நடவடிக்கைக்காக இந்த நீதிமன்றம் ஒரு குற்றத்திற்கான தண்டனையை வலியுறுத்தவோ அல்லது காத்திருக்கவோ தேவையில்லை.

41.தம்மிக்க சந்திரதிலக எதிர் சுசந்த மஹேஸ் மூனசிங்க (சுப்ரா), பிரதிவாதி-வழக்கறிஞர், மற்றவற்றுடன், மீள் பெறப்பட்ட தொகைக்கான வாக்குறுதிச் சீட்டை (ஓர் உறுதிப் பத்திரம்) பெற்றுக் கொள்ள தவறிவிட்டார். மற்றும் அதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி, ஏமாற்றுக் குற்றம் நிரூபிக்கப்பட்டு பட்டியலிலிருந்த பெயர் நீக்கப்பட்டது. அவருக்கு எதிராக எந்த குற்றவியல் கிரிமினல் வழக்கும் இல்லையென்றாலும் பட்டியலிலிருந்த பெயர் நீக்கப்பட்டது. உண்மையில், ரீ திருஞான சோதி குற்றவாளியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு சட்டஒழுங்கு முறையைக் கவனிப்பவர் நல்லது என விவரிக்கப்பட்டது ஆனால் தொழில்நுட்ப காரணங்களால் இருப்பினும் பட்டியலிலிருந்த பெயர் நீக்கப்பட்டது.

42. இந்த நீதிமன்றத்தின் முன் இருக்கும் விடயங்கள் -தகவல்கள் மற்றும் சாட்சியங்களில் இருந்து இது தெளிவாகத் தெரிகிறது: அந்த வழக்கறிஞர் வழக்குகளை விசாரணை செய்வதற்குப் பொருத்தமற்றவராகச் செயற்பட்டுள்ளார்.

அத்துடன் அவருக்கு எதிராக நிலைநிறுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளும் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது நிறுவப்பட்டுள்ளது பதிலளிப்பவர் தன்னை 2003 முதல் பயிற்சி செய்து வரும் ஒரு மூத்தவர் என்றும் கூறினாலும் அவர், ஒரு கற்றுக்குட்டியிடமிருந்து (புதியவர்) எதிர்பார்க்கப்படும் தரநிலைகளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார்.

43. மேற்கூறிய காரணங்களுக் காக, பதிலளிப்பவருக்கு எதிரான சட்ட விதி முழுமையாக ஆக்கப்பட்டுள்ளது மற்றும் பதிலளித்த செந்தஹேந்தி சரத் விஜேசிறிடி சில்வா, உடனடியாக வழக்கறிஞர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும் .

44. பதிலளிப்பவர் இந்த வழக்குத் தீர்ப்புத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மெய்நிகர் புகார்தாரருக்கு ரூ.3,000,000/- (ரூபா மூன்று மில்லியன்) திருப்பிக் கொடுக்கும்படி கட்டளையிடப்படுகின்றார்.

அத்துடன் உத்தரவிடப்படுகிறார் மற்றும் அவர் எந்த எந்த விடயங்களுக்காக அவர் தொடர்பான ஆவணங்களை தம் கைவசம் தக்கவைத்துக் கொண்டுள்ளாரோ அத்தனை ஆவணங்களும் மூன்று மாதங்களுக்குள் திருப்பிக் கொடுக்கும்படி கட்டளையிடப்படுகின்றார்.

45. உயர்நீதிமன்றத்தின் பதிவாளர் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து இந்த தீர்ப்பின் நகல் ஒன்றை (பிரதியை) பதிவாளர் ஜெனரலுக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

தீர்ப்பு விதி உறுதிப்படுத்தப்பட்டது.




பதிலளிப்பவர் வழக்கறிஞர் பதவியிலிருந்த -பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதிபதி

குமுதினி விக்கிரமசிங்க, ஜே.
நான் ஒப்புக்கொள்கிறேன்.
உயர்நீதிமன்ற நீதிபதி

அச்சலா வெங்கப்புலி, ஜே.
நான் ஒப்புக்கொள்கிறேன்.
உயர்நீதிமன்ற நீதிபதி

(முற்றும்)

# முல்லை பிரீமியர் லீக் போட்டி

## ஜனவரி 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது

## 6 அணிகள் பங்கேற்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காணவும், அவர்களின் திறமையை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் முல்லை பிரீமியர் லீக் கடினப் பந்து கிரிக்கெட் வீரர்களுக்கான மெகா ஏலம், முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிறந்த மற்றும் திறமையான வீரர்களை தேர்ந்தெடுத்து, தேசிய மற்றும் சர்வதேச அளவுகளில் அவர்கள் பிரபலமடைய வழிவகுப்பதனை முதன்மையான இலட்சியமாக கொண்ட இப் போட்டி மாவட்ட அளவில் முதன் முறையாக நடைபெறும் பிரமாண்டமான முன்னெடுப்பாகும்.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 6 அணிகள் குறித்த ஏலத்தில் பங்கேற்றிருந்தன. ஒவ்வொரு அணிக்கும் 15,000 புள்ளிகள் வழங்கப்பட்டு, குறைந்தது 15 வீரர்களை தேர்வு செய்ய வேண்டும் என்னும் விதிமுறையிலே ஏலம் நடைபெற்றிருந்தது.

முல்லை பிரீமியர் லீக் போட்டியில் குருந்தூர் அணியினை இ.கவாஸ்கரும் முல்லை டைமன் அணியினை கெ.கஜேந்திரனும், புதுவை புயல்கள் அணியினை கெ.ஜனீந்திரகாந்தும், முல்லை வாரியர்ஸ் அணியினை எம்.நிஷாக்கும், முல்லை அக்னி அணியினை எஸ்.நிமாகரனும், முல்லை ஏர்ஜன்சுப்பர் வோய்ஸ் அணியினை கெ.நிஷாந்தனும் அணிகளின் உரிமையாளர்களாக தங்களை முன்னிறுத்தி வீரர்களை முன்னோக்கி நகர்த்த தங்கள் அணிக்காக வீரர்களை போட்டியிட்டு தேர்வு செய்திருந்தனர்.

முல்லை பிரீமியர் லீக் (MPL) போட்டிகள் 2024 ஜனவரி 18 ஆம் திகதி மாமூலை சுதன் சுதனா விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளதுடன் இதன் இறுதி போட்டியானது பெப்ரவரி மாதம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளது. (6-8-299)

# கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

## சம்பியனான மலையாளபுரம் பாரதி



கிளிநொச்சி பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டியில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழகம் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

கிளிநொச்சி பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆதவன் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் வட்டக்கச்சி குறிஞ்சி விளையாட்டுக்கழகமும் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக்மும் மோதியிருந்தன.

குறித்த இறுதிப்போட்டியில் புதிய பாரதி அணி 3-0என்ற கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

சுழற்சி முறையிலான போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த 13அணிகள் பங்குபற்றியிருந்தன.

குறித்த இறுதிப்போட்டி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டிருந்தார். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகை - காங்...

குப் பிறகு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

மோசமான வானிலை காரணமாக அந்தச் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டது. பின்னர் மீண்டும் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

எனினும் மீளவும் வானிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இந்தச் சேவை நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை நிறுத்தம் செய்யப்படும் எனக் கப்பல் நிறுவனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தமிழக மற்றும் இலங்கை இடையேயான கப்பல் போக்குவரத்துச் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் திகதி முதல் மீண்டும் தொடங்கும் என கப்பல் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கப்பல் சேவைக்கான முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் வாரத்திற்கு ஆறு நாட்கள் இந்தச் சேவை கிடைக்கும் என்றும், ஒருமுறை சென்று வருவதற்கான போக்குவரத்துக் கட்டணம் இலங்கை மதிப்பில் 35 ஆயிரம் ரூபாய் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த முறையேனும் தமிழகம் மற்றும் இலங்கைக்கு இடையேயான கப்பல் சேவை தொடர்ந்து நீடிக்குமா..!? என்ற கேள்வி பயணிகளிடத்தில் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சுதந்திர...

நாட்டின் கௌரவத்தை மேலோங்க செய்யும் வகையில் வெகுவிமர்சையாகவும் செலவுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் இம்முறை சுதந்திர தின நிகழ்வை நடத்த எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தெரிவித்தார்.

தேசிய சுதந்திர தின ஏற்பாட்டுக் குழு கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்னவின் தலைமையில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

77ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு இம்முறை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பொதுமக்களும் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்துள்ளோம். மேலும் 1600க்கும் மேற்பட்ட விசேட விருந்தினர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

எனவே நாட்டின் கௌரவத்தை மேலோங்கச் செய்யும் வகையில் வெகு விமர்சையாகவும் செலவுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் இம்முறை சுதந்திர தின நிகழ்வை நடத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

இக்கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் எஸ்.அலோக்க பண்டார, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தா, விமானப்படை தளபதி, முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ந-7)

## இலங்கையை...

ளார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனுபவம் இல்லாதவர்களிடம் நாட்டை ஒப்படைக்க, மக்கள் எடுத்த தீர்மானத்தினால் இன்று அவர்கள் பெரும் நெருக்கடி நிலையை எதிர் நோக்கி வருகின்றனர்.

அரசாங்கத்தினால் தீர்வு வழங்கப்பட முடியாது காணப்படும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டுப் பிரச்சினைகள், ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்தபோது இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் காலத்தில் 'அரிசிக்கான தட்டுப்பாடும் இருக்கவில்லை, இலவசமாக மக்களுக்கு 20 கிலோகிராம் அரிசி விநியோகம் செய்யப்பட்டது.

இவ்வாறு பல ஆயிரக்கணக்கான தொன் எடையுடைய அரிசி விநியோகம் அப்போது இடம்பெற்றது.

இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால், அதிகாரம் இருந்தாலும், அதிகாரம் இல்லை என்றாலும் உதவுவதற்கு ரணில் தயாராக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## இராணுவ, கடற்...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் புதிய இராணுவத் தளபதி மற்றும் கடற்படைத் தளபதிகள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இலங்கையின் 25ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே இன்றுடன் ஓய்வுபெறவுள்ள நிலையில் இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட நியமிக்கப்பட்டுள்ளார். கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவும் இன்றுடன் ஓய்வு பெறவுள்ள நிலையில் புதிய கடற்படைத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார். (ந-7)

கூறுகையில்,

"எந்தவித திட்டமிடலும் இல்லாமல் தாம் நினைத்த மாதிரி தீர்மானங்களை கோட்டாபய அரசு எடுத்ததன் விளைவாகவே நாட்டில் அன்று வரிசை யுகம் தோன்றியது.

அதைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிய அந்த அரசை மக்கள் அணிதிரண்டு விரட்டியடித்தார்கள். நாட்டில் தற்போது உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு கிடையாது. எனினும் சில இடங்களில் உணவுப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலை இல்லாமல் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. புத்தாண்டில் இந்த நிலைமை முடிவுக்கு வரும்.

உணவுப் பொருட்களைக் கூடுதல் விலைக்கு விற்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ந-7)

## விகா...

வெளியிட்டு வருவதுடன் அநுர அரசின் செயற்பாடுகள் டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் இடம்பெறுகின்றன எனக் கூறியதுடன் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உயிராபத்து ஏற்படக்கூடும் என்ற குற்றச்சாட்டுக்களையும் பகிரங்கமாக முன்வைத்து வந்தது.

இது இவ்வாறிருக்க நேற்று பொதுஜன பெரமுனவின் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் விகாரைகளின் கட்டுமாணப் பணிகளில் இருந்து இராணுவத்தினரை ஏன் அரசு நீக்க வேண்டும், அரசு எவரைத் திருப்திப்படுத்தும் நோக்கில் இவ்வாறு செயற்படுகின்றது எனக் கேள்வியெழுப்பினார். (ந-7)

## மக்...


றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும்

மஹஜன சம்பத — திகதி 2024.12.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5701 — M 9 8 6 4 1 8 — 932717 — 54303 — 120938
பரிசு அதிர்ஷ்ட இலக்கங்கள் — ரூ.50,000/- — 2304546, 2959375, 2774546, 2554875, 0280465, 2635712, 2829126, 1992447, 0253178, 0461966, 0242152, 1914565, 1485326, 3038595, 1914229
அத சம்பத — M 6 4 1 8 — 276
தன நிதானய — திகதி 2024.12.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1731 — C 30 35 46 75 C — Double Chance 79097
மெகா பவர் — திகதி 30/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2049 — Q 19 22 30 67 74 — 022359
லக்கி 7 VIP — திகதி 2024.12.30 — சீட்டிழுப்பு இலக்கம் 527 — Z 6 0 1 8 5 6 Z
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3943 — சீட்டிழுப்பு திகதி 30.12.2024 — O 07 31 38 55 — O 159387
HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1010 — மிதுனம் 01 09 43 56 மிதுனம் — 084525 — 34
உத்தியோகபூர்வ முடிவுகள் — 30.12.2024 — வெற்றி வாரம் 409 — Z 6 5 3 6 4 4 — 84751 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,182,768.80
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2675 — சீட்டிழுப்பு திகதி 2024.12.30 — திங்கட்கிழமை — 09 15 32 75 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,914,008.80
சனிதா — திகதி 30.12.2024 — வெற்றி வாரம் 4836 — 02 11 60 62 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,141,124.00 — 43550
ஜயோதா Jayoda — திகதி 2024.12.30 — வெற்றி வாரம் 2090 — 03 23 53 55 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,051,632.40
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4387 — சீட்டிழுப்பு திகதி 30.12.2024 — திங்கட்கிழமை — 12 35 44 62 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,795,610.00 — 225597
கப்ருக — V 04 10 25 42 53 — 1851 — 30.12.2024 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,873,936.00
ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2501 — சீட்டிழுப்பு திகதி 2024.12.30 — 12 22 36 61 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,524,029.60 — 396386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 - 04 - 1960

மறைவு
29 - 12 - 2024

## எமிலியானஸ்பிள்ளை நித்தியானந்தராஜா

(முன்னாள் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சியப் பொறுப்பாளர்)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசாவிளான் உத்தரிய மாதா கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட எமிலியானஸ்பிள்ளை கந்தையா நித்தியானந்தராஜா அவர்கள் 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எமிலியானஸ்பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான சபாநாயகம் - சிசிலியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி றுவீனா அவர்களின் அன்புக் கணவரும் நிலக்ஷிகாவின் பாசமிகு தந்தையும் யோசேப் ஜெகநாதன், றீற்றா இராஜகுமாரி, ஆரோக்கியநாதன் ஜெயராஜா, பற்றிமாமலர், ஜெயக்குமாரி ஜெயந்தி, காலஞ்சென்றவர்களான அன்ரனி ஜெயரட்ணம், பிரான்சிஸ் ஜெயபாலன் ஆகியோரின் சகோதரனும் தனிநாயகம், தனநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் திருஉடல் இன்று 31.12.2024 செவ்வாய்க்கிழமை அன்னாரின் வடமூலை வசாவிளான் இல்லத்தில் பி.ப 2.00 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4.00 மணியளவில் ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் இறுதி திருப்பலியுடன் ஆலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
071 349 9998

(2879)

# 2025 ஆம் ...

"ஐ.நா சபையே நீதியைப் பெற்றுத் தா" எனும் கோசத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா உள்ளடங்கலாக வட மாகாணம் முழுவதும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளினால் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, "காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே? இராணுவத்தினரிடம் கையில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன?, ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா, 15 வருடங்களாகப் போராடும் எமக்கு விடிவு இல்லையா? எனப் பல்வேறு கோஷங்களை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பியதுடன் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

ஊடகங்களிடம் இது குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. அமர்வில் எமக்கான நீதியைப் பெற்றுத் தர ஐ.நா. வலியுறுத்த வேண்டும்.

2025 ஆம் ஆண்டிலாவது எமது 15 வருடப் போராட்டத்துக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்றனர். இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ந-7)


மொத்தக் கொள்வனவு
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 773 0900
48/= 80/=
(693)

விற்பனைக்கு
யாழ். கஸ்தூரியார் வீதியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் சுற்று மதிலுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
076 579 9693
(2878)

ICT புதிய பிரிவுகள் ஆரம்பம் திரு.இ.குமரன் -B.Sc
Gr. 6,7,8,9,10,OL
Branch I : 74, சபாபதி வீதி, தலையாழி, பிரம்படி
Branch II : கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதி
Computer Lab
Study Guide
Examination
Past Papers
Revision
Tamil / English Medium Classes
ICT துறையில் 22 வருட கற்பித்தல் அனுபவம்
MIS ICT COLLEGE
TP:0776577359, Mr.R.Kumaran - B.Sc.
(692)


# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

## 2025 உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத் திருத்தம் பொது ஆலோசனை கேட்டல்

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சார சபை) 2025 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும் அது தொடர்பான ஆலோசனைப் பத்திர அறிக்கைகளை www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

முன்மொழியப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாகப் பொதுமக்களின் எழுத்துபூர்வ கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான வாய்மூலக் கருத்துக்களை தெரிவிக்கும் அமர்வு 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி முதல் 09 மாகாணங்களிலும் நடைபெறும்.

பொதுமக்களின் ஆலோசனை கேட்டல் முடிந்த பின்னர் ஆணைக்குழு இறுதி முடிவை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதியன்று அறிவிக்கும்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துபூர்வ கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

தபால் -
"மின்சார கட்டணம் குறித்த பொது ஆலோசனை"
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல. 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.

பெக்ஸ் : 011 239 2641
வட்ஸ்அப் : 076 427 1030
மின்னஞ்சல் : info@pucsl.gov.lk
இணையத்தளம் : www.pucsl.gov.lk
முகநூல் : www.facebook.com/pucsl

வாய்மொழிமூல அமர்வுகளில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்க பின்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்

| மாகாணம் | பொது ஆலோசனைக்கான கேட்பதற்கான இடம் | திகதி | பதிவுகளுக்கு |
|---|---|---|---|
| வடக்கு | மாவட்ட செயலக கேட்போர் கூடம், யாழ்ப்பாணம் | 2025 ஜனவரி 06 | 077 039 9119 |
| கிழக்கு | மாவட்ட செயலக கேட்போர் கூடம், மட்டக்களப்பு | 2025 ஜனவரி 08 | |

தலைவர்,
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.
31.12.2024


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1917)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(C-1918)
076 825 7716 (ஆகாஸ்)

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
ரோயல் நெய்
Royal
உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான ரோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567
Packed By:-
Royal Industries®
(C-1916)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# குற்றஞ்சாட்டப்பட்ட ஜனாதிபதி யூனை கைது செய்ய பிடியாணை உத்தரவு

(சியோல்)

குறுகிய கால இராணுவச் சட்டமூலம் தொடர்பான விடயத்தில் பதவி இடை நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள தென் கொரிய சட்ட அமுலாக்க அதிகாரிகள் நீதிமன்ற பிடியாணை உத்தரவு கோரியுள்ளனர்.

தென் கொரியாவின் கூட்டுப் புலனாய்வுத் தலைமையகம் நேற்று திங்கட்கிழமை யூனைக் கிளர்ச்சி மற்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்ய பிடியாணை உத்தரவைக் கோரியது.

விசாரணைக்கு ஆஜராகுமாறு இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு முன்னதாக அனுப்பப்பட்ட மூன்று அழைப்பாணைகள் நிராரிக்கப்பட்டதன் பின்னணியில் பிடியாணை உத்தரவினை நாடியதாக உயர் அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகம், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய கூட்டு புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் தென் கொரிய வரலாற்றில் முதன் முறையாக ஜனாதிபதி ஒருவரைக் கைது செய்வதற்கான பிடியாணை கோரிக்கை தொடர்பில் நீதிமன்றம் முடிவினை மேற்கொள்ளும்.

கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி யூனின் குறுகிய கால இராணுவச் சட்டமானது தென் கொரியாவை திகைக்க வைத்ததுடன் கிழக்கு ஆசிய தேசத்தை பல தசாப்தங்களில் அதன் மிகப் பெரிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியது.

இதனால் யூன் டிசம்பர் 14 ஆம் திகதி அவரது பணிகளில் இருந்து இடை நீக்கம் செய்யப்பட்டார். தேசிய சட்டமன்றம் அவரைப் பதவி நீக்கம் செய்வதற்காகப் பெரும்பான்மையாக வாக்களித்தது.

அரசியலில் நுழைவதற்கு முன்பு நாட்டின் உயர்மட்ட வழக்கறிஞராகப் பணியாற்றிய பழைமைவாதத் தலைவர், கிளர்ச்சி, ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தின் குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார். (நி-8)

# தமிழை கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



(டில்லி)

உலகிலேயே மிகவும் தொன்மையான மொழி தமிழ் மொழி ஆகும் என்றும் இது, இந்தியர்கள் அனைவருக்கும் பெருமிதமான, பெருமை சேர்க்கும் விடயம் என்றும் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் தமிழ் மொழியைப் படிப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நரேந்திரமோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு மனதின் குரல் நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை அகில இந்திய வானொலி மூலம் நாட்டு மக்களிடம் உரையாற்றி வருகிறார்.

நேற்று முன்தினத்துடன் 117 ஆவது அத்தியாயத்தை எட்டியுள்ளதுடன் இந்த ஆண்டுக்கான கடைசி மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி மேற்படி உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். (நி-8)

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் காலமானார்



(வோஷிங்டன்)

1977 முதல் 1981 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் 39 ஆவது ஜனாதிபதியாகப் பணியாற்றிய ஜிம்மி கார்ட்டர் தனது 100 ஆவது வயதில் ஜோர்ஜியாவில் உள்ள அவரது வீட்டில் காலமானார் என்று அமெரிக்க ஊடகத்தை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது மனிதாபிமானப் பணிக்காக அமைதிக்கான நோபல் பரிசை வென்ற கார்ட்டர், இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கார்ட்டர் 1976 அமெரிக்கத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் ஜெரால்ட் ஃபோர்டை தோற்கடித்து வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தார்.

கார்ட்டர் அண்மைய ஆண்டுகளில் கல்லீரல் மற்றும் மூளைக்கு பரவிய மெலனோமா உட்பட பல உடல்நலப் பிரச்சினைகளால் தொடர்ந்தும் போராடி வந்தார்.

அவர் 2023 இல் ஆண்டில் தீவிர நோய் வாய்ப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு வகை சுகாதாரப் பராமரிப்பைப் பெற முடிவு செய்தார்.

மேலும் கூடுதல் மருத்துவத் தலையீட்டிற்கு உட்படுத்த வேண்டாம் என்றும் அவர் தீர்மானித்திருந்தார்.

2023 நவம்பர் 19 அன்று 96 வயதில் உயிரிழந்த அவரது மனைவி ரோசலின் கார்டரின் இறுதிச் சடங்கில் அவர் கலந்து கொண்டார்.

இதன்போது அவர் பல வீனமான நிலையில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

எவ்வாறெனினும் கார்ட்டர் தனது பதவிக் காலத்திற்குப் பின்னர் மற்ற எந்த அமெரிக்க ஜனாதிபதியையும் விட நீண்ட காலம் வாழ்ந்தவர் என்ற சிறப்பை அடைந்தார். (நி-8)

# மானுக்கு தெரிந்த மரியாதை வைரலாகும் காணொளி

(டோக்கியோ)

உலகில் தினமும் நிகழும் நிகழ்வுகளில் ஒரு சில நிகழ்வுகள் நம்மை மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளாக்குகிறது. அந்த வகையில் மானொன்றின் நடத்தை இணைய வாசிகளிடையே பல கேள்விகளையும் ஆச்சரியத்தையும் குவித்துள்ளது எனலாம்.

இதன்போது ஜப்பானில் உள்ள உயிரியல் பூங்காவைச் சேர்ந்த நரா என்ற மானின் காணொளியே தற்போது இணையத்தில் பேசுபொருளாகியுள்ளது.

குறித்த மானானது தன்னை நோக்கி வணக்கம் கூறுபவர்களுக்கு தானும் தலை குனிந்து வணக்கம் சொல்கிறது.

ஒவ்வொரு நாட்டவர்களுக்கும் இடையே வணக்கம் கூறும் முறை கலாசாரத்தின் அடிப்படையில் வேறுபடும். அந்த வகையில் ஜப்பானியர்கள் மற்றவர்களுக்கு குனிந்து வணக்கம் கூறுவார்கள்.

அந்த கலாசாரத்தை போன்றே அந்த மான் தலை குனிந்து வணக்கம் தெரிவிக்கின்றது. அத்துடன் அந்தப் பூங்காவில் உள்ள ஏனைய மான்களும் தலை குனிந்தே வணக்கம் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

இந் நிலையில் வணக்கம் செலுத்தும் மானின் காணொளி தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 669





எப்படி? எப்போது? என்றான்.

“அதற்கும் சேர்த்துத்தான் இந்த யுக்தி செய்திருக்கிறேன். சமாதானப் பேச்சு என்ற வியாஜத்தின் பேரில் நமது முதற் பகைவனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருக்கிறது. அவன் அங்கே கட்டாயம் வந்து சேருவான். நம்முடைய சபதத்தை அங்கேதான் நிறைவேற்றியாக வேண்டும். வீரபாண்டிய சக்கரவர்த்தியின் ஆபத்துதவிகளே! உங்களுடைய பழி தீரும் வேளை நெருங்கி விட்டது. இன்றைக்கு சனிக்கிழமையல்லவா? அடுத்த சனிக்கிழமைக்குள் நம்முடைய சபதம் நிறைவேறிவிடும்!”

அங்கே இருந்த இருபது பேர்களும் ஏக காலத்தில் ‘ஆஹா’ காரம் செய்தார்கள். சிலர் துள்ளிக் குதித்தார்கள். உடுக்கு வைத்திருந்தவன் உற்சாக மிகுதியினால் அதை இரண்டு தடவை தட்டினான். மரக்கிளைகளில் தூங்கிக்கொண்டிருந்த ஆந்தைகள் விழித்து உறுமிக் கொண்டு வேறு கிளைகளுக்குத் தாவின. வௌவால்கள் சடசடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டு ஓடின. வந்தியத்தேவனுடைய குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது.

வந்தியத்தேவனும் நிமிர்ந்து பார்த்தான். நந்தினி தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் ஏதோ பரபரப்புத் தரும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள் என்பது மட்டும் தான் தெரிந்தது. அவளுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை. ரவிதாஸன் மற்றவர்களுடைய உற்சாகத்தைக் கையமர்த்தி அடக்கினான்.

“தேவி! தங்களுடைய கடைசி வார்த்தை எங்களுக்கு அளவிலாத குதுகலத்தை அளித்திருக்கிறது. நமது முதற் பகைவனைக் கொன்று பழி முடிக்கும் காலம் இவ்வளவு அண்மையில் வந்திருப்பதை எண்ணிக் களிக்கிறோம்! ஆனால் பழிமுடிக்கும் பாக்கியம் யாருக்கு? என்று கேட்டான்.

அதற்கு நமக்குள் போட்டி ஏற்படுவது இயற்கைதான். அதை யாருக்கும் மனத்தாங்கல் இல்லாத முறையில் முடிவு செய்வதற்காகவே வீரபாண்டியரின் திருக்குமாரச் சக்கரவர்த்தியை இங்கு அழைத்து வரச் செய்தேன். வீரபாண்டியரின் கத்தியும் இதோ இருக்கிறது. இந்தச் சின்னஞ்சிறு குழந்தை தந்தையின் கத்தியைத் தொட்டு நம்மில் எவர் கையில் கொடுக்கிறதோ, அவர் பழி முடிக்க வேண்டும். மற்றவர்கள் அக்கம் பக்கத்தில் உதவிக்குச் சித்தமாக நிற்க வேண்டும். ஏற்றுக்கொண்டவர் தவறிவிட்டால் மற்றவர்கள் முன் வந்து முடிக்கவேண்டும். கடம்பூர் மாளிகைக்குள்ளேயே நான் இருப்பேன். இடும்பன்காரி கோட்டைக் காவலர்களில் ஒருவனாக இருப்பான். பழி முடிக்கும் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் மாளிகைக்குள் பிரவேசிப்பதற்கு நாங்கள் உதவி செய்வோம். இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் சம்மதம் தானே?

ஆபத்துதவிகள் ஒருவரையொருவர் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டார்கள். எல்லோருக்கும் அந்த ஏற்பாடு சம்மதமாகவே தோன்றியது.

ரவிதாஸன் கூறினான்” தாங்கள் சொன்னது சரியான ஏற்பாடுதான். அதற்கு நாங்கள் எல்லோரும் சம்மதிக்கிறோம். ஆனால் இன்னும் ஒரு விடயம். பழி முடிக்கும் பொறுப்பு யாருக்குக் கிடைக்கிறதோ அவர் சொல்கிறபடி மற்றவர்கள் கண்டிப்பாகக் கேட்கிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும்.

சக்கரவர்த்திக்குப் பிராயம் வருகிறவரையில் பழி முடித்தவன் இட்டதே சட்டமென்று மற்ற அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.”

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## அறமும் புகழும்



ஒரு ஊரிலே கண்ணப்பர் என்று ஒருவர் இருந்தார். அவர் பெரிய பணக்காரர் இல்லை. இருப்பினும் அவர் தம் மகனுக்கு ஒரு நோய் ஏற்பட்ட போது ஏதாவது ஒரு நல்ல அறம் செய்வதாகத் தெய்வத்திடம் உறுதி செய்து கொடுத்தார். மகன் பிழைத்து விட்டான்.

உறுதியை நிறைவேற்ற வேண்டும். என்ன அறம் செய்யலாம் என்று சிந்தித்தார். அந்த ஊரில் குளம் இல்லை. குடிநீருக்கு அரைக்கல் தொலைவில் உள்ள குளத்திற்கு மக்கள் சென்று வந்தார்கள். இதைக் கருதிய கண்ணப்பர் தம் ஊரில் ஒரு குளம் வெட்டினார்.

குளம் வெட்டும் செலவுக்கு அவரிடம் பணம் இருந்தது. அதற்குக் கல்லினால் கரையமைத்துப் படிபோடும் அளவிற்குப் பணம் இல்லை. ஆகவே அவர் கற்கரையும் படியும் அமைக்காமலே குளத்தை வெட்டி முடித்தார். குளத்தின் கரையில் “குளம் வெட்டியவர் கண்ணப்பர்” என்ற எழுத்துகள் பொறித்த ஒரு கல்லும் நாட்டினார்.

அதே ஊரில் நல்லப்பர் என்ற ஒருவர் இருந்தார். அவரும் செல்வந்தர் இல்லை. சாதாரண வணிகர் தான். அவர் ஒரு நாள் கண்ணப்பர் வெட்டிய குளத்தை வந்து பார்த்தார். கற்கரையும் படியும் அமைக்காமல் விட்டது ஒரு பெரும் குறையாக அவருக்குத் தோன்றியது.

அவர் கண்ணப்பரிடம் சென்றார். தம் மனக் கருத்தை வெளியிட்டார். கரை அமைக்காது விட்டால் குளம் விரைவில் தூர்ந்துவிடும் என்ற உண்மையை எடுத்துக் கூறினார். “நான் என்ன செய்வேன். என்னிடம் அதற்கு மேல் பணம் இல்லையே!” என்றார் கண்ணப்பர்.

“என்னிடம் சேமிப்புப் பணம் சிறிது இருக்கிறது. அதைத் தருகிறேன். கரையும் படியும் அமைத்து விடுங்கள்” எனக் கூறினார் நல்லப்பர். அவ்வாறே பணமும் கொடுத்தார். கண்ணப்பர் அதன்பின் தம் அறப்பணியைச் செவ்வனே செய்து முடித்தார். கண்ணப்பர் நல்லப்பர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கவில்லை.

நல்லப்பரின் நண்பர் சிலர் அவரிடம் வந்து கரை கட்டிப் படி அமைத்தவர் நல்லப்பர் என்று கல் நாட்டும்படி வற்புறுத்த வேண்டும் என்றார்கள்.

கண்ணப்பரை நல்லப்பர் மறுத்து விட்டார். அறம் செவ்வனே நடக்க வேண்டும். அதுதான் நம் குறிக்கோள். பெயர் நாட்டுவது அல்ல என்று கூறினார் நல்லப்பர்.

கருத்துரை:- நல்லவர்கள் மக்கள் நலத்தையே நாடுவர். தங்கள் புகழை நாட்டிக்கொள்ள நினைக்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org